Shalom

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்தி மலர்

தனிப்பிரதி ₹. 10/-
ஆண்டுச் சந்தா ₹. 100/-
ஆயுள் சந்தா ₹. 1000/-

மலர் : 13 | இதழ் : 01 | நவம்பர் 2016

பீல் ஆதிவாசி மக்கள் தரிசன பணியில்

ஷாலோம் 25 YEARS வெள்ளி விழா ஆண்டு



# இதோ (இயேசு கிறிஸ்து) மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும்.

வெளிப்படுத்தின விசேஷம் 1:7

ஆசிரியர்.
பேராயர் வே. தேவதாஸ்



*உங்கள் சகோதரனிடமிருந்து...*

## கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே!

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்களை ஷாலோம் பணித்தளத்திலிருந்து தெரிவித்துக் கொள்கிறேன். தேவனுடைய பெரிதான கிருபையினாலும் உங்கள் யாவருடைய ஜெபங்களினாலும், ஆதரவுகளினாலும் ஷாலோம் ஊழியங்கள் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களிலும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

3 மாநிலங்களிலும் தேவ கிருபையினால் கடந்த மாதத்தில் நடைபெற்ற ஷாலோம் மிஷன் ஞாயிறை ஆசரித்த பீல் மக்கள் அனைவரும் துதி செலுத்தி தங்கள் காணிக்கைகளை மனப்பூர்வமாக கொடுத்து கடந்த வருடத்தைக் காட்டிலும் அதிகமாக கொடுக்க கிருபை பாராட்டினார்.

மேலும் குஜராத் மாநிலத்தில் பரூச் என்கிற இடத்தில் ஷாலோம் சுதேச ஊழியர் குடும்ப எழுப்புதல் தரிசன முகாம் மற்றும் வெள்ளி விழா ஆண்டு நிறைவு சிறப்பு கூடுகை கர்த்தருடைய பெரிதான கிருபையால் சிறப்பாக நடந்து முடிந்தது. தேவன் அவருடையபிள்ளைகளான சகோ. மோகன் சி. லாசரஸ் மற்றும் அநேக தேவ பிள்ளைகளைக் கொண்டு கூட்டங்களை சிறந்த முறையில் நடத்தி முடிக்க கிருபை பாராட்டினார்.

அநேக ஊழியர்கள் தரிசனங்களைப் பெற்று சென்றிருக்கிறார்கள். மற்றும் பணித்தள வருகையில் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களை கொண்டு அநேக ஆலய பிரதிஷ்டைகளையும் மற்றும் அடிக்கல் நாட்டு விழாவும் சிறப்பாக நடந்தது. இதனுடைய விவரங்கள் அனைத்தையும் அடுத்த மாத பத்திரிகையில் காண்போம்.

வருகின்ற கிறிஸ்துமஸ் நாட்களில் நாம் வழக்கம் போல் பீல் சுதேச ஊழியர்களுக்கும் அவர்களது மனைவிமார்களுக்கும் பிள்ளைகளுக்கும் புத்தாடைகளை கொடுத்து வெகுமதிகளை வழங்கி வருகிறோம். அதே போல் இந்த வருடமும் நாம் கொடுப்பதற்கு ரூ.15 இலட்சங்கள் தேவைப்படுகிறது. இந்த தேவைகளுக்காக ஜெபித்து நவம்பர் மாத காணிக்கையோடு சேர்த்து அனுப்பினால் அவர்களுக்கு உதவிசெய்ய ஏதுவாக இருக்கும். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**"இதோ சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது." வெளி. 22:12**

**தேவ அறுவடை பணியில் உங்கள் அன்பு சகோதரன்,**

(பேராயர். V. தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள
**09377445468**

# இதோ, நான் சீக்கிரமாய் வருகிறேன்
## - இயேசு கிறிஸ்து

சிறப்பு செய்தி : பேராயர் **வே. தேவதாஸ்**

நம் இரட்சகரும் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் முதல் வருகையின் நற்செய்தியை வரும் டிசம்பர் மாதம் நினைவு கூர்ந்து உலக மெங்கும் தேவஜனங்கள் கொண்டாடி துதிக்கும் நாட்களாய் இருக்கிறது. சுமார் 2000 வருடங்களுக்கு மேலாக முதல் வருகையை நினைத்து ஆராதித்து கொண்டாடி வருகிற நாம் அதைவிட மேலான இரண்டாம் வருகையை குறித்து தியானித்து விழிப்புடன் பரிசுத்தமாக வாழும்படி வேதம் நம்மை எச்சரித்து ஆலோசனை கூறுகிறது.

அப்போஸ்தலர் 1:11 வாசித்து பாருங்கள் "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்." இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மிக சமீபம் என்று மணவாட்டியான சபை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. பரிசுத்த பவுல் திருச்சபைக்கு நிரூபங்களை எழுதும் போது இவைகளை குறித்தும் எழுதியுள்ளார். இரண்டாம் வருகையைக் குறித்து அநேக காரியங்களை அறிய முடிந்தாலும் மூன்று காரியங்களை, மூன்று காரியங்களை நாம் சற்று தியானிப்போம்.

1 தெசலோனிக்கேயர் 4:16,17 வாசித்து பாருங்கள், "ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். 17, பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்."

முதலாவதாக, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எழுந்திருப்பார்கள். மரித்தோர் உயிர்த்தெழுதலும், நியாயத்தீர்ப்பும் நிச்சயமாக உண்டு என்று வேதம் சொல்லுகிறது. அதை நாமும் விசுவாசிக்கிறோம். இந்த வசனத்தை வாசிக்கும்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. வெளி. 7:11,14 வாசிப்போம். தூதர்கள் யாவரும் சிங்காசனத்தையும் மூப்பர்களையும் நான்கு ஜீவன்களையும் சூழநின்று சிங்காசனத்திற்கு முன்பாக முகங்குப்புற விழுந்து, தேவனைத் தொழுது கொண்டு: 14, அதற்கு நான் ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன் இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள்

தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்.

ஆட்டுக்குட்டியான இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே தோய்த்து வெளுக்கப்பட்டவர்கள் மட்டுமே அங்கு காணப்படுகிறார்கள். கிறிஸ்தவனாக பிறந்தபடியால் அல்லது ஆலயத்துக்கு ஒழுங்காக செல்வதால், திரளான காணிக்கை கொடுப்பதால், பெரிய பொறுப்புகளை ஊழியத்தில், சபையில் நிறைவேற்றுவதால் அல்ல; பாவமன்னிப்பின் நிச்சயத்தை பெற்று, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்கள், ஜீவபுஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்டவர்கள் மட்டுமே அந்த திரளான கூட்டத்தில் நிற்க முடியும்.

லூக்கா 16ம் அதிகாரத்தில் ஐசுவரியவான் லாசருவை பற்றி வாசிக்கிறோம். என் தகப்பனாகிய ஆபிரகாமே என்று பாதாளத்திலிருந்து அவன் வேதனையுடன் கூப்பிடுவதைக் காண்கிறோம். ஒருவேளை உலகத்தில் அவனுடைய இறந்த சரீரத்தை வைத்து அடக்க ஆராதனை மிக சிறப்பாக நடத்தியிருக்கலாம். ஜீவபுஸ்தகத்தில் பெயர் எழுதப்பட வில்லை எனில் பரலோகத்தில் இடம் இல்லை. சபை புஸ்தகத்தில் எழுதப் பட்டிருக்கலாம், திருமண்டல திருமண பதிவு புஸ்தகத்தில் எழுதப்பட்டி ருக்கலாம், சபையின் மரண பதிவு புஸ்தகத்திலும் எழுதப்பட்டிருக்கலாம். ஆனால் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மட்டுமே மரித்தோர் உயிர்த் தெழுந்து கிறிஸ்துவுடன் ஆளுகை செய்வார்கள். நாமும், நம் குடும்பத் தாரும், நம் சந்ததியும் ஆயத்தமாக உள்ளோமா? என சிந்திப்போம்.

இரண்டாவதாக, தேவஜனங்கள் கிறிஸ்துவுடன் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள், 1 தெச. 4:17 வாசித்துப் பாருங்கள், "பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்."

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு உயிரோடு இருக்கும் நாமும் ஆயத்தமாய் இருக்க வேண்டும். பரலோக ராஜ்ஜியத்தை குறித்து மத்தேயு 25:1-13 வரை 10 கன்னிகைகள் உவமை மூலமாக வாசித்து அறிகிறோம். அதில் 13வது வசனத்தை பாருங்கள் மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள் தீவட்டி களை பெற்று கொண்டாலும் புத்தியில்லாத கன்னிகைகள் எண்ணெய் இல்லாமல் இருந்தார்கள். ஒருவேளை மணவாளன் இப்போது வரமாட்டார் என்று வருகையைக் குறித்து அவிசுவாசமும் தவறான எண்ணம் கொண்டி ருந்தார்கள். மேலும் மணவாளன் வந்து விட்டால் எப்படியாவது சுற்றி உள்ளவர்களை வைத்து சமாளித்து விடலாம் என நினைத்தார்கள். நம்மை சுற்றி சபை, ஊழியர்கள், போதகர்கள், இரட்சிக்கப்பட்டவர்கள், நம் குடும்பத்தார் அந்த வேளையில் உதவுவார்கள் என்று தவறான எண்ணத்துடன் வாழ்ந்தார்கள். மட்டுமல்ல நம்முடைய ஆண்டவர்

அன்பு, தயவுள்ளவர், நமக்காக கதவை திறந்தே வைத்திருப்பார். நம்மை கைவிடமாட்டார் என தவறான எண்ணம் கொண்டார்கள்.

எனக்கன்பானவர்களே, புத்தியில்லாத கன்னிகைகளை போல் இயேசு எப்போது வருவார்? இப்போது வரமாட்டார் என்று பிசாசின் தந்திரமான நிர்விசாரமான ஆலோசனைக்கு விலகியிருப்போம். நாமும் அறியாத வேளையில் இயேசு கிறிஸ்து வரும்போது நமக்கு உதவி செய்ய யாரும் வரமுடியாது. ஆகவே நமக்கு கிருபையினால் கொடுக்கப்பட்ட இரட்சிப்பையும், பரிசுத்த ஆவியானவரையும், வரங்களையும் கிறிஸ்து வுக்குள் அனுதினமும் காத்து வாழ்வோம். இயேசு கிறிஸ்துவின் முதல் வருகையில் கிருபையுள்ளவராக வந்தார். கிருபையின் காலத்தில் வாழ்கிறோம். கிருபையில் நிலைத்திருந்து காத்துக் கொள்வோம். இரண்டாம் வருகையில் அவருடைய பயங்கரமான நியாயத்தீர்ப்பை உணர்ந்தவர்களாய ஜீவிப்போம். "முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்." மத்தேயு 24:13

கடைசியாக, இயேசுகிறிஸ்து தான் மறுபடியும் வரும்போது அவ னவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது என்று வாக்கு உரைத்துள்ளார். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நமக்கு பல விதமான பலன்களை தருகிறார். அதை நாம் பெற்றுக் கொள்ள தேவன் நமக்கு இந்த உலகில் கொடுத்த நன்மைகளை, தாலந்துகளை தேவனுக்கு பயன்படுத்த வேண்டும். இதை தேவன் எதிர்பார்க்கிறார். எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகம் கேட்கப்படும் என்று தேவன் சொல்லுகிறார்.

மத்தேயு 25ம் அதிகாரத்தில் 14 முதல் 20 வரை தாலந்துகளை பற்றிய உவமையை கொண்டு இயேசு கிறிஸ்து பரலோக ராஜ்ஜியத்தை விளக்கியுள்ளார். அந்த உவமையில் அனைவருமே தாலந்துகளை பெற்ற வர்கள். அவனவன் திறமைக்குத் தக்கதாக பகிர்ந்து 5, 2, 1 என்று கொடுத் துள்ளார். திரும்பி வந்தபோது அவர் கணக்கு கேட்கிறார். ஐந்து தாலந்து பெற்றவனும், இரண்டு தாலந்து பெற்றவனும் இருமடங்காக உழைத்து கணக்குகளை கொடுத்தார்கள். எஜமானனும் புகழ்ந்தார்.

பிரியமானவர்களே, இவ்வுலகில் வாழும் நாம் அனைவருக்கும் தேவன் மூன்று கிருபைகளை தந்துள்ளார். 1)Time (காலம்) 2)Talent (கிருபை வரங்கள், தாலந்துகள்) 3)Treasure (செல்வம்).

1. காலம் **(Time)** : நாம் உயிர்வாழும் 60 அல்லது 70 அல்லது 80 வருடங்க ளில் எத்தனை ஆத்துமாக்களை தேவனண்டையிலே கொண்டு வந்தோம். 60 அல்லது 70 அல்லது 80 ஆத்துமாக்களை கூட தேவனண்டை நடத்தாமல் வெறுங்கையுடன் எப்படி அவரை சந்திப் போம். ஆகவே தேவன் நமக்குத் தந்த இந்த பொன்னான நேரத்தை அவருடைய நாம மகிமைக்காகவும், அவருக்காக ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதிலும் செலவிடுவோம்.

2. தாலந்துகள் (Talent): தேவன் நமக்கு இரட்சிப்பையும், பரிசுத்த ஆவியான வரையும் தந்துள்ளார். ஆவிக்குரிய கிருபை வரங்களை தந்துள்ளார். மட்டுமல்ல அவனவன் திறமைக்குத்தக்கதாக பாடுவது, பேசுவது, சபைகளில், ஊழியங்களில் முன்நின்று காரியங்களை நடத்துவது போன்ற பல கிருபைகள், தாலந்துகளை தந்துள்ளார். இவைகள் எதற்காக? ஆத்தும ஆதாயம் செய்வதற்கும், திறப்பில் நின்று ஜெபிப்ப தற்கும், ஊழியங்களுக்கும் சபைகளில் தேவஜனங்களுக்கு உறுது ணையாக நின்று தேவனுடைய ராஜ்ஜியத்தை கட்டுவதற்காகத்தான் தந்துள்ளார். ஒவ்வொரு விசுவாசியும் தனக்குத் தேவன் கொடுத்த ஆவிக்குரிய நன்மைகளையும், தேவன் தந்த ஞானத்தை தாலந்துகளை பயன்படுத்தும்போது தேவனுடைய ராஜ்ஜியம் கட்டப்படும்.

3. செல்வம் (Treasure): மத்தேயு 25ம் அதிகாரம் 31-40 வரை உள்ள வசனங்களை வாசிக்கும் போது மேய்ப்பனானவன் செம்மறி ஆடு களையும், வெள்ளாடுகளையும் பிரிப்பது போல ஆசீர்வதிக்கப்பட்டவர் களையும், சபிக்கப்பட்டவர்களையும் கர்த்தர் இரண்டாகப் பிரித்து கூறு கிறார். என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, நான் பசியாயிருந் தேன், தாகமாயிருந்தேன், அந்நியனாயிருந்தேன், வஸ்திரமில்லாதிருந் தேன், வியாதியாயிருந்தேன், காவலிலிருந்தேன். யாரை பற்றிக் கூறுகி றார்? இந்த சிறிய என் சகோதரர் என்று கூறுகிறார்.

எனக்கன்பானவர்களே தேவன் நமக்கு அநேக செல்வங்களை இந்த உலகில் தந்துள்ளார். இந்த உலகத்தில் குறிப்பாக நம் தேசத்தில் வாழும் பல கோடி ஜனங்கள் சரீரத்திலும், ஆத்துமாவிலும் ஆயிரம் தேவையுள்ள வர்களாய் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க சுவிசேஷகர்களை ஜெபித்து அனுப்பி தாங்குவோம். ஏழை விசுவாச ஜனங் களுக்கு, பிள்ளைகளுக்கு உதவி செய்து கல்வியறிவு கொடுப்போம். ஆரா திக்க ஆலயம் இல்லாதவர்களுக்கு ஆலயங்களைக் கட்டிக் கொடுப்போம். பல நூறு கிராமங்களில் மருத்துவ பணிகளைச் செய்வோம். Love God and Love your neighbour என்ற கட்டளையின்படி நமக்கு தந்த செல்வங்களை தேவனுடைய ராஜ்ஜியத்தின் கட்டுமானப் பணிக்காக விதைப்போம். வரு கையின் நாளில் அதை மனிதருக்காக, சபைக்காக, ஸ்தாபனத்திற்காக அல் ல, இயேசுவுக்காக செய்தோம் என்ற ஆனந்தம் நம்மை நிரப்பும். தேவன் நமக்குத் தந்த இந்தக் கிருபையை நாம் இந்த உலகத்தில் வாழும்போது பர லோக ராஜ்ஜியத்தின் மேன்மைக்காக பயன்படுத்த வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார்.

“அவர் வரும் நாளிலே என்னை கரம் அசைத்து
அன்பாய் கூப்பிட்டு சேர்த்துக் கொள்வார்
அவர் சமூகமதில் அங்கே அவருடனே
ஆடிப்பாடியே மகிழ்ந்திருப்பேன்.”

# ஷாலோம் ஊழியத்தின்
# அவசர மற்றும் அவசியத் தேவைகள்



- மூத்த சுதேச ஊழியர்களான தலைவர்களுக்கு, ஒவ்வொருவரும் 20 கிராம சபைகளை கண்காணிக்கவும், வெளி ஊழியங்களுக்குச் செல்லவும் ரூ. 50,000/- மதிப்பில் 50 மோட்டார் சைக்கிள்கள் தேவை.



- கிராமங்கள் தோறும் இயேசு திரைப்படத்தின் மூலமாக சுவிசேஷம் அறிவிக்க சுமார் ரூ.40,000 மதிப்புள்ள 8 L.C.D Projector உடனடியாகத் தேவை.



- சுமார் 300 சபைகளுக்கு ரூ. 3500/- மதிப்பில் டோலாக், ஜால்ரா, சிங்கி மற்றும் கிராம சபைகளில் உபயோகப்படுத்தக் கூடிய இசைக் கருவிகள் தேவை.



- 400க்கும் அதிகமான சபைகளில் மின்சார வசதி கிடையாது. வசதிகள் இருந்தாலும் ஒழுங்காக மின்சாரம் கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட கிராமங்களில் அதிகமான விசுவாசிகள் உள்ள சபைகளுக்கு சுமார் ரூ. 6500/- மதிப்பிலான பேட்டரியுடன் இயங்கக்கூடிய **Ahuja, Stranger, speaker Box with Amplifer** போன்ற உபகரணங்கள் **300** சபைகளுக்குத் தேவை.



- இந்த ஆண்டு 10,000 புதிய விசுவாசக் குடும்பங்களுக்குக் கொடுக்கும்படியாக குஜராத்தி ஹிந்தி மொழிகளில் ரூ. 150/- வீதம், 10,000 வேதாகமங்களுக்கு, நிதி உதவி தேவை.



- தமிழ்நாட்டில் ஷாலோம் ஊழியங்களை சபைகள் மற்றும் தேவ ஜனங்களுக்கு அறிமுகம் செய்து, பீல் மக்கள் இரட்சிப்பிற்காக ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்களை எழுப்பி நிதி உதவி சேகரித்து அனுப்பும் ஷாலோம் பிரதிநிதிகள் குறைந்தது 500 பேர்கள் தேவை.

**ஜெபிப்போம்! கொடுப்போம்! செயல்படுவோம்!**

**தேவ நாமத்தை மகிமைப்படுத்துவோம்!**

# ஜெபகுறிப்புகள்

- ஊழியர்களுக்கு விரோதமாய் கிரியை செய்கிற எல்லா மந்திர, தந்திர வல்லமைகள் அழிக்கப்பட ஜெபிப்போம்.

- தேவனுடைய திட்டங்களை பூமியிலே செயல்படுத்த, தேவ ஞானம், கிருபை, வல்லமை, அபிஷேகம், அளவில்லாமல் கொடுக்கும்படியாய் பாரத்தோடு ஜெபிப்போம்.

- ஊழியம் செய்யும் ஊழியர்கள் அசதியாய் இராமல் ஜாக்கிரதையாய் ஊழியம் செய்ய, விசுவாசிகளுக்கு மாதிரியாய் காணப்பட, பரிசுத்தத்தை வெளிப்படுத்த ஜெபிப்போம்.

- ஊழியர்களுக்கு நல்ல ஜீவன், சுகம், பெலன், தீர்க்காயுசை தேவன் கட்டளையிடும்படியாய், பாடுகள் மத்தியில் சோர்ந்து போகாமல், எலியாவைப் போல வைராக்கியமாய் செயல்பட தேவன் உதவி செய்யும்படியாய் பாரத்தோடு ஜெபிப்போம்.

- எல்லா ஊழியர்களுக்குள்ளும் அன்பு, ஐக்கியம், ஒருமனம், ஒற்றுமையை தேவன் கட்டளையிடும்படியாய், அதன் மூலம் தேசத்திலே மிகப்பெரிய எழுப்புதல் உண்டாகும்படியாய் ஜெபிப்போம்.

- ஊழியர்கள் சத்தியத்தை சத்தியமாய் போதிக்க, கள்ள உபதேசங்கள், வேத புரட்டுகள் திருச்சபைக்குள் நுழையாதவாறு திறப்பில் நின்று கதறுகிற மோசேக்களை தேவன் எழுப்பும் படியாய் பாரத்தோடு ஜெபிப்போம்.

- நம்முடைய ஊழியர் குடும்பங்களுக்காய், பிள்ளைகளை தேவன் வல்லமையாய் பயன்படுத்தும்படியாய் கண்ணீரோடு ஜெபிப்போம்.

- ஊழியர்கள் பிரயாணங்களுக்கு விரோதமாய் கிரியை செய்யும் தீய வல்லமைகள் அழிக்கப்பட..

- வாகனம் வைத்திருக்கிற ஒவ்வொரு தேவனுடைய ஊழியர்களும் வெளியூர்களுக்கு வெகுதூரம் பிரயாணம் பண்ணுகிற பிள்ளைகளுக்காய், நல்ல கண்விழிப்பை தேவன் கட்டளையிடும்படியாய் ஊக்கமாய் ஜெபிப்போம்.

- ஒவ்வொரு வாகனத்தின் மேல் தேவன் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை தெளிக்கும்படியாய் ஜெபித்து, பொறுமையோடு வாகனத்தை ஓட்ட தேவன் உதவி செய்யும்யடியாய் பாரத்தோடு ஜெபிப்போம்.

- மிஷனெரி குடும்பங்கள் அனைத்தையும் தேவன் நடத்தும்படியாய் பிள்ளைகளுடைய கல்வி, தேவைகள் சந்திக்கப்படும்படியாய் ஜெபிப்போம்.

# ஜெபகுறிப்புகள்

- ஒவ்வொரு ஊழியர்களை தேவன் கரத்தில் எடுத்து பயன்படுத்தும்படியாய் அவர்களுக்கு விரோதமாய் எழும்பும் தீய வல்லமைகளை தேவன் அழித்து நிர்மூலமாக்கும்படியாய் நாம் கண்ணீரோடு ஜெபிப்போம்.

- தங்கள் உயிர்களை பணயம் வைத்து கிறிஸ்துவின் சேனையில் யுத்த வீரர்களாய் நின்று ஊழியம் செய்யும் ஊழியர்களை தேவன் பலப்படுத்தவும், சோதனைகள், உபத்திரவங்கள் மத்தியில் சோர்ந்து போகாது வைராக்கியத்தோடு ஊழியம் செய்யும்படியாய் பாரத்தோடு ஜெபிப்போம்.

- மலைகளிலும், காடுகளிலும், குகைகளிலும், நாகரிகமற்ற மக்கள் மத்தியில், பாஷை தெரியாத ஜனங்கள் மத்தியில் ஊழியம் செய்யும் மிஷனெரிகளை தேவன் பலப்படுத்தும்படியாய் நாம் பாரத்தோடு ஜெபிப்போம்.

- ஊழியர்களின் பரிசுத்த வாழ்க்கைக்காகவும், ஊழியர்களை தேவன் அக்கினி ஜீவாலையாக எடுத்து பயன்படுத்தும்படியாகவும் நாம் பாரத்தோடு ஜெபிப்போம்.

- ஊழியர்கள் தேவவார்த்தைகளை பகிர்ந்துக் கொள்ளும்போது தேவ அபிஷேகத்தினால் நிறைந்தவர்களாய் காணப்படும்படியாக நாம் ஜெபிப்போம்.

- ஊழியர்கள் ஊழியத்திற்கு அர்ப்பணித்த பின் தங்கள் தேவைகள் மற்றும் சூழ்நிலைகள் நிமித்தமோ பிரச்சனைகளினிமித்தமோ தங்கள் ஊழியத்தை விட்டு பின்வாங்கி போகாமல் இருக்கும்படியாகவும் நாம் பாரத்தோடு ஜெபிப்போம்.

- ஊழியர்கள் ஊழியங்களை வைராக்கியத்தோடும், பாரத்தோடும், வல்லமையோடும் செய்யும்படியாக நாம் ஜெபிப்போம்.

- ஊழியர்கள் சபை விருத்தியடையும் படியாகவும், அநேக விசுவாசிகள் மந்தையில் சேரும்படியாகவும் நாம் பாரத்தோடு ஜெபிப்போம்.

- ஊழியர்களது குடும்பங்கள், அவர்கள் பிள்ளைகளுடைய கல்வி, எதிர்காலங்கள் ஆசீர்வதிக்கும்படியாகவும், பிள்ளைகளும் தொடர்ந்து ஊழியங்களை செய்யும் படியாக நாம் ஜெபிப்போம்.

## குஜராத் பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்

ஊழியர். தெர்சிங் டாமோர் சிமளியா

ராஜீபாய் என்ற சகோதரன் சின்னம்மை வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்தார். பலவித வைத்தியம் செய்தும் எந்தவித பலனுமில்லை. இந்நிலையில் இயேசுவை விசுவாசித்து ஜெபித்தபோது பரிபூரண விடுதலைப் பெற்றார்.

தர்கா என்ற சகோதரி வயிறு வலியினால் கஷ்டப்பட்டார். ஆடு, கோழிகளை வெட்டி பலி செலுத்தியும் எந்தவித பலனுமில்லை. இறுதியில் சபைக்கு சென்று ஜெபித்தபோது அற்புத சுகம் பெற்றார்.

ஊழியர். சுரேஷ் சங்காடா நெல்சூர்

தினாபாய் என்ற சகோதரன் இருமலினால் வெகு நாட்களாக பாதிக்கப்பட்டிருந்தார்கள். மந்திரம் மற்றும் பில்லிசூனிய கிரியைகளை செய்தும் எந்தவித பலனுமில்லை. இந்நிலையில் ஷாலோம் விசுவாசி ஒருவர் மூலமாக சபைக்கு சென்று ஜெபித்தபோது சுகம் பரிபூரண விடுதலைப்பெற்றார். ரமிலா என்ற சகோதரியின் வயிற்றில் கட்டி இருந்தது. பலவித வைத்தியம் செய்தும் அதிக பணம் செலவழித்தும் சுகம் கிடைக்கவில்லை. விசுவாசி மூலம் இயேசுவை முழுமையாக விசுவாசித்து சபைக்கு சென்று ஜெபித்தபோது கட்டி மறைந்து பரிபூரண விடுதலைப் பெற்றார்.

ஊழியர். தர்சிங் வாக்லே முண்கோசலா

கமலி என்ற சகோதரி சரீர பெலவீனத்தால் பல நாட்களாக பாதிக்கப்பட்டிருந்தார். இவரை ஷாலோம்சபைக்கு அழைத்துசென்று எண்ணெய்பூசி ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

லாசு என்ற சகோதரி 3 வருடமாக அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். பல வைத்தியம் செய்தும் ஆடு, கோழிகளை வெட்டி பலி செலுத்தியும் பலனில்லை. இறுதியில் லாசு சகோதரியை சபைக்கு அழைத்துசென்று ஜெபித்தபோது பரிபூரண விடுதலைப் பெற்றார்.

ஊழியர். பச்சு பாபேரியா ராசராடா

மங்குபாய் என்ற சகோதரன் 2 வருடமாக சுவாசிக்க முடியாமல் வேதனைப்பட்டார். ஆடு, கோழிகளை வெட்டி பலியிட்டும் எந்தவித பலனுமில்லை. இறுதியில் இயேசுவை விசுவாசித்து சபைக்கு சென்று ஜெபித்தபோது விடுதலைப்பெற்றார்.

ஊழியர். சாம்சன் டாமோர் வாங்கோல்

பூரி என்ற சகோதரி வயிறு வலியினால் மிகவும் பாதிக்கப்பட்டார். பலவித வைத்தியம் செய்தும்ஆடு, கோழிகளை வெட்டி பலி செலுத்தியும் எந்தவித பலனுமில்லை. இறுதியில் இயேசுவை விசுவாசித்து ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

ஊழியர். பாகா கட்டாரா பாவ்கா

பாத்லி என்ற சகோதரி 2 வருடமாக வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்தார். அதிக பணம் செலவழித்தும் எந்தவித பலனுமில்லை. இந்நிலையில் விசுவாசி ஒருவர் மூலம் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

## இராஜஸ்தான் பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்

ஊழியர். பர்மேஷ்வர் ரானா பார்டாபுரா

பதிபேன் என்ற சகோதரியின் மகன் குடிப்பழக்கத்திற்கு அடிமை யாக இருந்ததால் பதிபேன் சமாதானம் இல்லாமல் வேதனைபட்டார். பல முறை புத்தி சொல்லியும் கேட்கவில்லை. இயேசுவை குறித்து கேள்விப் பட்டு தனது மகனுக்காக ஜெபித்து கொண்டிருந்தார். சில நாட்களில் தேவன் குடிப்பழக்கத்தில் இருந்து விடுதலைப் கொடுத்தார்.

ஊழியர். கல்சிங் மாவி விசியா கோரா

சசின்கட்டாரா என்ற சகோதரன் அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட் டிருந்தார். பல வைத்தியம் செய்தும் ஆடு,கோழிகளை வெட்டி பலி செலுத்தியும் எந்தவித பலனுமில்லை. சசின் கட்டாராவின் பெற்றோர்கள் சசின் கட்டாராவை சபைக்கு அழைத்து சென்று ஜெபித்தபோது பரிபூரண விடுதலைப் பெற்றார்

ஊழியர். பாதா கட்டாரா சுடாதா

புளிபேன் என்ற சகோதரி 2 வருடமாக பிசாசின் பிடியினால் பாதிக் கப்பட்டிருந்தார். மந்திரம் செய்தும் செய்வினை பார்த்தும் எந்தவித பலனு மில்லை. இந்நிலையில் இவரது பெற்றோர்கள் இயேசுவை விசுவாசித்து சபைக்கு சென்று ஜெபித்தபோது அற்புத விடுதலையைப் பெற்றார்கள்.

ஊழியர். புஞ்சலால்டோடியார் ஆர்மி

தீபாபேன் என்ற சகோதரி ஒரு மாதமாக வயிறு வலி மற்றும் வயிற் றுப்போக்கினால் கஷ்டப்பட்டார். பலவித வைத்தியம் செய்தும் எந்தவித பலனுமில்லை. இந்நிலையில் விசுவாசி ஒருவர் மூலம் சபைக்கு சென்று ஜெபித்தபோது அற்புத சுகம் பெற்றார்.

கக்காபேன் என்ற சகோதரி 5 மாதமாக நடக்க முடியாமல் கால் ஊனத்தினால் மிகவும் வேதனைப்பட்டார். பல வைத்தியம் செய்தும் ஆடு, கோழிகளை வெட்டி பலி செலுத்தியும் பலனில்லை. இந்நிலையில் இயே சுவை விசுவாசித்து ஜெபித்தபோது நடக்க தேவன் கிருபை செய்தார்.

கர்மாபேன் என்ற சகோதரி மூச்சு திணறலினால் ஒரு வருடமாக வேதனைப்பட்டார். மந்திரம் செய்தும் ஆடு,கோழிகளை வெட்டி பல செலுத்தியும் பலனில்லை. இறுதியில் இயேசுவை விசுவாசித்து பாரத் தோடு ஜெபித்தபோது பரிபூரண விடுதலைப்பெற்றார்.

ஊழியர். ராகிங் கராசியா ஜெரி சோட்டி

ரினாபேன் என்ற சகோதரி ஒரு வருடமாக மாதவிடை வராதிருந்தது. பல மந்திரவாதிகளை நாடி சென்றும் எந்தவித பலனுமில்லை. இந்நிலையில் ரினாபேனுக்கு இயேசுவைப் பற்றி கூறி ஜெபித்தபோது அற்புத விடுத லைப் பெற்றார்.

# மத்தியப்பிரதேசம் பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்

**P**ஊழியர்.அபிஷேக் நினாமா பிப்ளிபாடா

ஆஷிஷ் என்ற சகோதரன் நிமோனியா காய்ச்சலினால் பல நாட்களாக பாதிக்கப்பட்டிருந்தார். பல வைத்தியம் செய்தும் எந்தவித பலனுமில்லை. இயேசுவை விசுவாசித்து ஜெபித்தபோது அற்புத சுகம் பெற்றார்.

சுரேந்திரபாய் என்ற சகோதரன் காய்ச்சலினால் வேதனைப்பட்டார். இயேசுவை விசுவாசித்து ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

மங்குபாய் என்ற சகோதரனின் மனைவியை பாம்பு கடித்துவிட்டது. இவருக்காக ஜெபித்தபோது விஷம் ஏறாமல் தேவன் பாதுகாத்தார்.

ஊழியர்.ரம்சு புரியா கச்சால்தாரா

ஐகூ என்ற சகோதரன் கிறிஸ்தவர்களை அதிகமாக வேதனைப்படுத்தி துன்பப்படுத்தி வந்தார். பல முறை இவருக்கு அறிவுரை கூறியும் எந்தவித பலனுமில்லை. இந்நிலையில் பலவித நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். மந்திரம் மற்றும் செய்வினை செய்தும் எந்தவித பலனுமில்லை. இந்நிலையில் விசுவாசி ஒருவர் மூலமாக இயேசுவை ஏற்றுக்கொண்டு சபைக்கு சென்று ஜெபித்தபோது கர்த்தர் சுகம் கொடுத்து ஆசீர்வதித்தார்.

ஊழியர். மங்கு புரியா கட்வாபாடா

மங்கு புரியா என்ற ஊழியரின் மருமகள் 3 மாதமாக இருதய வால்வினால் பாதிக்கப்பட்டிருந்தார்.பல வைத்தியம் செய்தும் ஆடு, கோழிகளை வெட்டி பலி செலுத்தியும் எந்தவித பலனுமில்லாமல் அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்று மருத்துவர்கள் கூறினார்கள். இவர்களுக்காக கண்ணீரோடு தேவ சமூகத்தில் ஜெபித்தபோது கர்த்தர் அறுவை சிகிச்சை இல்லாமலே பரிபூரண விடுதலையைக் கொடுத்தார்.

ஊழியர்.மங்கள்சிங் வாசுனியா சளக்கியா

கந்திபேன் என்ற சகோதரி பல வருடமாக அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். பல வைத்தியம் செய்தும் ஆடு,கோழிகளை வெட்டி பலி செலுத்தியும் எந்தவித பலனுமில்லை. இந்நிலையில் இயேசுவை விசுவாசித்து கந்திபேனை சபைக்கு அழைத்துசென்று ஜெபித்தபோது பரிபூரண விடுதலைப் பெற்றார். முகேஷ்பாய் என்ற சகோதரன் திடீரென மயங்கி விழுந்து விட்டார். பல வைத்தியம் செய்தும் பலனில்லை. இயேசுவின்நாமத்தில் கண்ணீரோடு ஜெபித்தபோது அற்புத சுகம் பெற்றார்.

ஊழியர். தும்லா கார்ட் வால்பூர்

அஜ்மாபேன் என்ற சகோதரி மூடநம்பிக்கை, விக்கிரகம் மந்திரவாதிகளுக்கு அடிமையாக இருந்தார். இதனால் அஜ்மாபேன் உதிரப்போக்கினால் பாதிக்கப்பட்டிருந்தார். பல வைத்தியம் செய்தும் ஆடு,கோழிகளை வெட்டியும் பலனில்லை.இந்நிலையில் இயேசுவை விசுவாசித்து கண்ணீரோடு சபைக்கு அழைத்துசென்று ஜெபித்தபோது அற்புத விடுதலைப் பெற்றார்.

# சுதேச ஊழியரை உருவாக்குவதில் உங்கள் பங்கு

## சுதேச ஊழியர்களை ஜெபித்து தாங்க முன்வாருங்கள்

நாம் போய் நற்செய்தி அறிவிக்க முடியாத இடங்களில் அறிவிக்கும்படி ஒப்புக் கொடுத்த ஊழியர்களைத் ஜெபித்துத் தாங்குவது நமது கடமையாகும்.

தென்னிந்தியாவில் நற்செய்தி கொண்டு வந்த மிஷனெரிமார்களை அங்குள்ள சபையார், விசுவாசிகள் ஸ்தாபனத்தின் மூலமாகத் தாங்கி அனுப்பி வைத்தார்கள்.

"***அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசிங்கிப்பார்கள்***" ரோமர் 10:15

ஒரு பீல் சுதேச ஊழியர் குடும்பத்தை மாதம் ரூ.2500 கொடுத்து ஜெபித்து தாங்குவோர் தேவை.

- உங்கள் சபையாக தாங்க முன்வரலாம்
- உங்கள் ஊழியத்தின் சார்பில் தாங்க முன்வரலாம்
- உங்கள் குடும்பத்தின் சார்பில் தாங்க முன்வரலாம்.
- உங்கள் குடும்ப அங்கத்தினர்கள் இணைந்து தாங்கலாம் (ரூ.500 கொடுக்கும் ஐந்து பேராக)
- நீங்களே பிரதிநிதியாக செயல்பட்டு ரூ100, 200, 500 கொடுக்கும் ஆதரவாளர்களை கண்டுபிடித்து குழுவாக ஜெபித்துத் தாங்க முன்வரலாம்.
- இதுவரை தேவகிருபையால் பெற்ற 600 சுதேச ஊழியர்கள் பெயரும் பணித்தளத்தின்பெயரையும் தேவநாமம் மகிமைப்படவும், நீங்கள் ஜெபிக்கும்படியாகவும் பிரசுரித்துள்ளோம். ஊழியர்களைத் தாங்குவோர் பட்டியலில் தேவனுடைய ஊழியத்தை செய்துவரும் ஸ்தாபனங்கள், ஆவிக்குரிய சபைகள் மற்றும் தனிப்பட்ட குடும்பத்தார் குழுவாக இணைந்து தாங்குவோர் என்று உள்ளார்கள். தங்களுடைய சபை, ஊழியம் மற்றும் குடும்பத்தின் மிகுதியான தேவைகளின் மத்தியிலும் தேசம் தேவனை அறிய பாரத்துடன் ஜெபித்துத் தாங்கி வரும் அனைவருக்காகவும் தேவனைத் துதிக்கிறோம். மனதார நன்றி செலுத்தி எங்கள் வாழ்த்துதலைக் கூறுகிறோம்.

ஊழியம் செய்து வரும் 600 ஊழியர்களில் பேர்களை ஜெபித்து தாங்கக்கூடிய ஆதரவாளர்கள் உடனடியாகத் தேவை. மேலும் 3 ஆண்டுகளில் இன்னும் 400 சுதேச ஊழியர்கள் எழும்பி பீல் ஆதிவாசிகளின் பகுதிகளை சந்திக்க வேண்டும். ஆவியானவர் ஏவினால் உடனடியாக எங்களுடன் தொடர்பு கொள்ளவும். தாங்கும் ஊழியர் குடும்பத்தை நேரில் கொண்டு வந்து பிரதிஷ்டை செய்கிறோம். சாட்சி, புகைப்படங்கள் மற்றும் மாதாந்திர ஊழிய அறிக்கையை தமிழில் மொழியாக்கம் செய்து அனுப்புகிறோம்.

"தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக் கொள்கிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்.... என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்கிறேன்" - இயேசு. மத். 10:41



எனது பெயர் பர்து டின்டோர். நான் பீல் ஆதிவாசி இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவன். நான் இயேசுவை அறியாத போது சாராயம், பீடி, தம்பாக்கு சண்டைப்போடுவது போன்ற பாவங்களுக்கு அடிமையாகவும், விக்கிரக ஆராதனை செய்பவனாகவும் வாழ்ந்து வந்தேன். பாவங்களினிமித்தம் எனது குடும்பத்தில் சமாதானமில்லாமல் சந்தோஷமில்லாமல் இருந்தது.

இந்நிலையில் எனது அத்தை வியாதிப்படுக்கையில் இருந்தார்கள். பல ஆயிரங்கள் செலவழித்தும் பலனில்லை. இந்நிலையில் ஷாலோம் ஊழியர்.சந்து டாமோர் மூலம் தர்த்கட் சபைக்கு அழைத்து சென்று ஜெபித்தபோது பரிபூரண விடுதலையை பெற்றார்கள். மேலும், நான் அசுத்த ஆவியினால் அலைக்கழிக்கப்பட்டிருந்தேன். நானும் அந்த சபைக்கு சென்று ஜெபித்ததால் விடுதலையையும், சமாதானத்தையும் பெற்றுக்கொண்டேன்.

இந்த அற்புதத்தின் மூலம் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக 1996 ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்டு, 2007 ல் ஞானஸ்நானம் பெற்று, தொடர்ந்து ஷாலோம் தர்த்கட் குஜராத் சபைக்குச் சென்று ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்தோம். ஒரு நாள் நான் ஜெபித்துக்கொண்டிருந்த வேளையில் பீல் இன மக்கள் அழிந்து கொண்டிருக்கிற காட்சியை தரிசனமாக பார்த்தேன்.

எனக்காக ஜீவன் தந்த இயேசுவுக்காக நான் ஊழியம் செய்ய வேண்டுமென்ற பாரம் ஏற்பட்டு ஊழியம் செய்ய என்னை அர்ப்பணித்து ஷாலோம் ஊழியத்தில் இணைந்து 1 மாத ஊழியப்பயிற்சி பெற்று தற்போது எனது சொந்தக் கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறேன்.

**Sponsor Name : CSI Christ Church, Trichy Road, Coimbatore**



எனது பெயர் சஞ்சய் ராட்டுவா. நான் பீல் ஆதிவாசி இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவன். நான் இயேசுவை அறியாத போது சாராயம், பீஜ, தம்பாக்கு, கொள்ளையடிப்பது போன்ற பாவங்களுக்கு அடிமையாகவும், விக்கிரக ஆராதனை செய்பவனாகவும் 15 வருடமாக வாழ்ந்து வந்தேன். என் அப்பா, அம்மா என்னால் சமாதானமில்லாமல் இருந்தார்கள்.

இந்நிலையில் ஷாலோம் ஊழியர். ரமேஷ் மச்சார் இயேசுவைப் பற்றி கூறி இயேசு பாவங்களை மன்னிக்கிறார். சந்தோஷத்தையும் சமாதானத்தையும் தருவார் என்று கூறினார்கள். பின்பு ஷாலோம் சபைக்குச் சென்று போதகர். ரமேஷ் மச்சார் அவர்கள் மூலம் சத்தியத்தைக் கேட்டேன். சத்தியத்தை கேட்க கேட்க நான் எனது பாவங்களை அறிக்கையிட்டு மனந்திரும்பினேன். இயேசு என் பாவங்களை மன்னித்து குடும்பத்தில் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொடுத்தார்.

அதன் மூலம் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தொடர்ந்து ஷாலோம் சப்ரா சபைக்குச் சென்று ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்தேன். பின்பு 2010 ல் ஊழியர். டெடு மூலமாக ஞானஸ்நானம் பெற்று பரிசுத்தாவியின் அபிஷேகத்தையும் பெற்றுக்கொண்டேன். ஒரு நாள் நான் ஜெபித்துக்கொண்டிருந்த வேளையில் அநேக ஜனங்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும்படியான காட்சியை தரிசனமாக பார்த்தேன்.

எனக்காக ஜீவன் தந்த இயேசுவுக்காக நான் ஊழியம் செய்ய வேண்டுமென்ற பாரம் ஏற்பட்டு ஊழியம் செய்ய என்னை அர்ப்பணித்து 2010ல் ஷாலோம் ஊழியத்தில் இணைந்து 1 மாத ஊழியப்பயிற்சி பெற்று தற்போது எனது சொந்தக் கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறேன்.

**Sponsor Name : CSI Christ Church, Trichy Road, Coimbatore.**

# ஷாலோம் சுதேச ஊழியர் சாட்சி

என்னுடைய பெயர் வினு பார்கி. நான் குஜராத் மாநிலம் ஆனந்த் மாவட்டத்திலுள்ள குல்ஜார் கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி.நான் இயேசுவை அறியாததற்கு முன் சாராயம்,பீடி,தம்பாக்கு என பல்வேறு பாவங்களுக்கும், கெட்ட நண்பர்களோடு ஐக்கியப்பட்டிருந்தேன். இந்நிலையில் சரீர பெலவீனத்தினாலும், நெஞ்சு வலியினாலும் 3வருடமாக பாதிக்கப்பட்டிருந்தேன். எனது சுகத்திற்காக ரூ.50,000 வரை செலவு செய்தும் சுகம் கிடைக்கவில்லை.



எவ்வளவோ மந்திரம் செய்தும் பலனில்லை. இந்நிலையில் ஊழியர். நளின் சௌஹான் இயேசுவை பற்றி எனக்குக் கூறினார். நான் இயேசுவை விசுவாசித்தேன். ஊழியர் ஜெபித்தபோது எனக்கு பரிபூரண சுகம் கிடைத்தது. இயேசுவை எனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றேன். பின்பு சபைக்கு சென்று வேதம் வாசித்து ஜெபித்து தேவனுக்குள் வளர ஆரம்பித்தேன்.

ஒருநாள் தேவன் தரிசனத்தின் மூலம் என்னை ஊழியம் செய்யும்படிக்கு அழைத்தார். நான் ஊழியம் செய்யும்படி என்னை அர்ப்பணித்து, ஷாலோமில் இணைந்து குறுகிய கால வேதாகமப்பயிற்சியை பெற்று, எனது சபையில் 100 குடும்பங்களை ஆண்டவருக்குள் கொண்டு வர வேண்டும் என்ற தரிசனத்துடன் ஊழியம் செய்து வருகிறேன்.

எனக்கு வியாதியில் இருந்து விடுதலை கொடுத்து சுகம் தந்து என்னை வழி நடத்துகின்ற தேவன் தாமே எங்களுடைய பீல் ஆதிவாசி மக்களை பாவப்பிடியில் இருந்து விடுவித்து அவர்களை இரட்சிப்பிற்குள் கொண்டு வர வேண்டும் என்பதே என் வாஞ்சையும், ஜெபமுமாயிருக்கிறது. தேவனுக்கே மகிமை.

Sponsor Name : Payanam **C.S.I. Church, K.K.Dist.**

எனது பெயர் மடியா பாரியா. நான் பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவன். நான் இயேசுவை அறியாத போது சாராயம், பீடி, தம்பாக்கு, சண்டைப்போடுதல் போன்ற பாவங்களுக்கு அடிமையாகவும், விக்கிரக ஆராதனை செய்பவனாகவும் வாழ்ந்து வந்தேன். எனக்கு வயிற்றில் 3வருடமாக கட்டி இருந்தது. சுகத்திற்காக எவ்வளவோ இடத்திற்குச் சென்று மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்து சுமார் ரூ.30,000 வரை செலவு செய்தும் எந்த பலனுமில்லை.



இந்நிலையில் விசுவாசி ஒருவர் மூலம் இயேசுவை பற்றி கேள்விப்பட்டோம். அவர் எங்களை சபைக்கு அழைத்து சென்றார். அங்கு ஊழியர் ஜெபித்ததில் தேவன் எனக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் 2007ல் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டோம். தொடர்ந்து கேடி சபைக்குச் சென்று விசுவாசத்திலும், ஆவிக்குரிய வளர்ச்சியிலும் வளர்ந்தேன்.

பின்பு நான் ஒரு நாள் தனித்து ஜெபித்துக்கொண்டிருக்கையில் தேவன் என்னோடு ஊழியம் செய்ய வேண்டுமென்று பேசினார். அதனால் நான் ஊழியம் செய்ய என்னை அர்ப்பணித்து 2015ல் ஷாலோம் ஊழியத்தில் இணைந்து 1 மாத ஊழியப்பயிற்சி பெற்று தற்போது எனது சொந்தக் கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறேன். தேவனுக்கே மகிமை

Sponsor Name : **Mr.David Raj, Puthalam(P.o)**

**மாதந்தோறும் ரூ.2500/ கொடுத்து சுதேச ஊழியரை தாங்க முன்வாருங்கள்**

# மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனைகள்

## 2.10.2016 சி.எஸ்.ஐ. கிறிஸ்து ஆலயம், கோயம்புத்தூர்

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் கோயம்புத்தூரில் சி.எஸ்.ஐ. கிறிஸ்து ஆலயத்தில் 2.10.2016 அன்று மாலையில் 2 சுதேச ஊழியர்களான சகோ. பர்த்து ஆர். டின்டோர் (இராஜஸ்தான்) சகோ.சஞ்சய்ஆர்.ராட்டுவா (குஜராத்) இவர்களுக்கு பிரதிஷ்டை நடை பெற்றது. கர்த்தர் இந்த ஆராதனையை அபரிவிதமாக ஆசீர்வதித்து தந்தார். இதை நடத்தி தந்த போதகர் அவர்களுக்கு நன்றி செலுத்துகிறோம். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.










## 9.10.2016 பயணம் சி.எஸ்.ஐ. ஆலயம், கன்னியாகுமரி மாவட்டம்

கர்த்தருடைய பெரிதான கிருபையால் 9.10.2016 அன்று பயணம் சி.எஸ்.ஐ. ஆலயத்தில் காலை ஆராதனையில் சகோ. விஜு பார்கி (குஜராத்) ஊழியருக்கு பிரதிஷ்டை நடைபெற்றது. கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது. இந்த ஆராதனையை நடத்தி தந்த போதகர் அவர்களுக்கு எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.







## 14.10.2016 MUF மதுரை திருப்பாலை

கர்த்தருடைய பெரிதான கிருபையால் 14.10.2016 அன்று மதுரை திருப்பாலையில் வைத்து சகோ. மோகன் பி. காட் (இராஜஸ்தான்) ஊழியருக்கு பிரதிஷ்டை நடைபெற்றது. கர்த்தர் இந்த பிரதிஷ்டையை ஆசீர்வதித்து தந்தார். இந்த ஆராதனையை நடத்தி தந்த போதகர் அவர்களுக்கு எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.






## 30.10.2016 புத்தளம் லுத்தரன் ஆலயம், கன்னியாகுமரி மாவட்டம்

புத்தளம் லுத்தரன் ஆலயத்தில் 30.10.2016 அன்று ஞாயிற்று கிழமை காலை ஆராதனையில் சகோ. மடியா பரியா என்ற ஊழியருக்கு பிரதிஷ்டை நடைபெற்றது. கர்த்தர் இந்த ஆராதனையை மிகவும் ஆசீர்வதித்து தந்தார். இந்த ஆராதனையை நடத்தி தந்த போதகர் அவர்களுக்கு எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.

## முழு இரவு ஜெபம், திருநெல்வேலி

07.10.2016 அன்று திருநெல்வேலியில் Grace Hall -ல் வைத்து இரவு 9 மணி முதல் அதிகாலை 3 மணி வரை நடைபெற்றது. Prof.கிறிஸ்டோபர் அவர்கள் இதில் கலந்துக் கொண்டு முழு இரவு ஜெபத்தை நடத்தி தந்தார்கள். கர்த்தர் இந்த முழு இரவு ஜெபத்தை அபரிவிதமாக வல்லமையாக நடத்தி தந்தார். கர்த்தருக்கே கோடா கோடி நன்றி.

**நவம்பர் மாத முழுஇரவு ஜெபம்**

**நாள்: 04.11.2016**

**இடம்: Grace Hall (திருநெல்வேலி)**



# பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்கள்

சீடராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுங்கள் (மத். 28:19) அந்த அன்பு கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஆவியானவரால் அப்.தோமா இந்தியாவிற்கு வந்து தமிழ் நாட்டிலும், கேரளாவிலும் சீடர்களை உருவாக்கி சபைகளை நிறுவினார். தொடர்ந்து பல நாடுகளிலிருந்து பல மாநிலங்களிலிருந்து சுவிசேஷத்தை அறிவிக்க வருகிறார்கள். அவர்கள் மீண்டும் தாயகம் திரும்பாமல் மரித்தவர்கள் பலர். இரத்த சாட்சியாய் மரித்தவர்கள் பலர். வில்லியம் கேரி, சீகன்பால், இராக்லண்டு, போப், மர்காஷிஸ், ரேணியஸ், கால்டுவெல் என்ற அநேக மிஷனெரிமார்கள் தங்கள் ஜீவனையே கொடுத்தார்கள். சுவிசேஷத்தை அறிவித்தது மட்டுமல்ல கல்வி அறிவு, மருத்துவ வசதி, பொருளாதார, சமுதாய முன்னேற்ற திட்டங்களை உருவாக்கி தங்களை அர்ப்பணித்து மூப்பர்களை சீஷராக்கி சபைகளை ஸ்தாபித்தனர். கடந்த 50ஆண்டுகளாக வெளிநாட்டு மிஷனெரிகள் வருகை குறைந்தது, உதவியும் குறைந்தது. ஆத்மபாரமுள்ள தரிசனம் பெற்ற தலைவர்கள் எழும்பினர். பிஷப் அசரியா அவர்கள் மூலமாக IMS, NMS ஸ்தாபனங்களும் FMPB, GEMS,IEM,BYM போன்ற ஸ்தாபனங்களும் தென்னிந்தியாவில் எழும்பின. சபைகள் ஆயிரமாயிரமாய் உருவானது.

இந்த வரிசையில் தான் தேவன் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்க, சபைகளை நிறுவ **SHA**RING **LO**VE **M**ISSION ஊழியங்களை தரிசனமாக தந்தார். அப்போது தேவன் வலியுறுத்திய காரியங்கள் 1) பீல் ஆதிவாசி ஊழியர்களை சீடராக்கி முழுநேர ஊழியராக பிரதிஷ்டை செய்ய வேண்டும். 2) அவர்களை ஜெபித்துத் தாங்க வேண்டும். 3) சபைகளை உருவாக்கி ஆவிக்குரிய போதனைகள் கொடுத்து சுயமாய் அவர்களே இயங்கும் அளவுக்கு பயிற்சி கொடுக்க வேண்டும். 4) கிராம ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க வேண்டும். பீல் மொழியில் வேதபுத்தகம் கூட கிடையாது. படிப்பறிவு கிடையாது. திருட்டு, வேசித்தனம், மூர்க்ககுணம் உள்ளவர்கள். பேதையான

பேதுருவை ஆண்டவர் பயன்படுத்தியது போல SHALOM ஊழியர்கள் மூலம் பீல் மக்களை அறிவு பெறச் செய்தார்.

தேவன் தந்த ஆலோசனைக்குக் கீழ்ப்படிந்து இரு சுதேச ஊழியர்களை எங்கள் சிறிய வீட்டில் தங்கவைத்து நாங்கள் உண்ணும் உணவைக் கொடுத்து எங்கள் உடைகளை கொடுத்து அனுதினமும் ஜெபிக்கவும், வேத அறிவை கற்றுக் கொடுத்தும் வந்தோம். நாங்கள் பரிசுத்த ஆவியினால் நிறைந்து அந்நிய பாஷை பேசி ஜெபிப்பதைப் பார்த்து சுதேச ஊழியர்கள் பரவசமடைந்தார்கள். அது மட்டுமல்லாமல் ஜெபத்தின் விளைவாக தேவ வல்லமையும், சுகமளிக்கும் வரங்களும் கிரியை செய்ததை உணர்ந்து அதிக வாஞ்சையுடன் அந்த அனுபவத்தை கேட்டுக் கொண்டார்கள்.

1991ல் சகோ.G.P.S. ராபின்சன் ஊழியம் செய்ய வந்த போது ஆவியானவரால் படிப்பறிவு இல்லாத பாமர பீல் மக்கள் மீது ஆவியானவர் இறங்கினார்.

1992ல் பாபர் மசூதி உடைக்கப்பட்ட நேரம் ஜாலோத் ஊரில் தடை உத்தரவு அமுலானது. எனவே ஆறு வாரங்களாக மிஷனெரி இல்லத்தில் நடைபெற்ற வெள்ளிக்கிழமை கூட்டம் நிறுத்தப்பட்டது. அச்சமயம் 4சுதேச ஊழியர்கள் கிராம மக்கள் முகவரிகளை அறிந்து 12 கிராமங்களில் சுற்றித் திரிந்து விசுவாசிகளின் வீடுகளைச் சந்தித்து விசுவாசத்தில் உறுதிப்படுத்தினார்கள். அவர்கள் ஜெபிக்கும் போது தேவன் அற்புதங்களைச் செய்தார். பிசாசுகளைத் துரத்தினார்கள். என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான் யோவான் 14:12 என்ற இயேசுவின் வார்த்தையின்படி பீல் மக்களைப் பயன்படுத்தினார். சுதேச ஊழியர்கள் சுவிசேஷம் அறிவித்தபடியால் பல கிராமங்களில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. இவ்வாறு தேவ கிருபை யால் அவர் அநாதி தீர்மானத்தின்படி குஜராத், இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 600 பீல் ஆதிவாசி ஊழியர்களை இதுவரை தேவன் தந்தருளினார். அவருக்கே மகிமையுண்டாவதாக.

# சொந்த பீல் மக்களின் இரட்சிப்பிற்காக குடும்பமாக ஜெபிக்கும் சுதேச ஊழியர்கள்



# தமிழ் நாட்டில் நடைபெற்ற ஊழியங்கள்

29.09.2016 நாகர்கோவில்

கர்த்தருடைய பெரிதான கிருபையால் நாகர்கோவிலில் ஜெப ஆராதனை சகோதரி ரமோலா சாம்சன் அவர்கள் நடத்தினார்கள். அந்த ஆராதனையில் ஷாலோம் ஊழியங்களைக் குறித்து சகோ. ராபின்சன் அவர்கள் பகிர்ந்துக் கொண்டார்கள். இதற்கு வாய்ப்பளித்த Aunty அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

02.10.2016 மேலமலையன் ஏரி சி.எஸ்.ஐ. ஆலயம், டோனாவூர்

மேலமலையன் ஏரி சி.எஸ்.ஐ. ஆலயத்தில் ஆராதனை & ஷாலோம் ஊழியத்தைக் குறித்துப் பகிர்ந்துக் கொண்டு தேவசெய்தியும் கொடுக்கும்படியாக ஷாலோம் ஊழியத்திலிருந்து சகோ. டேவிட் அவர்களும் சகோதரி லதா அவர்களும் கலந்துக் கொள்ளும்படியாக கர்த்தர் கிருபை பாராட்டினார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக. இதற்கு வாய்ப்பளித்த போதகர் மற்றும் உபதேசியார் கிறிஸ்டோபர் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

09.10.2016அருளூர்சி.எஸ்.ஐ.ஆலயம்,திருநெல்வேலி மாவட்டம்

நம் ஷாலோம் ஊழியத்திலிருந்து சகோ. லதா, சகோ. எப்சிபா, சகோ. ஜெபராணி, சகோ. புஷ்பராணி ஆகியோர் கலந்துக் கொண்டு ஆராதனை, பாடல், தேவசெய்தி கொடுத்து கர்த்தர் நாமத்தை மகிமைப்படுத்தினார்கள். இதற்கு வாய்ப்பளித்த போதகர் அவர்களுக்கும், உபதேசியார் ஐசக் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

09.10.2016 தாமரைக்குளம் சி.எஸ்.ஐ. ஆலயம், கன்னியாகுமரி மாவட்டம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தாமரைக்குளம் சி.எஸ்.ஐ. ஆலயத்தில் 09.10.2016 அன்று ஷாலோம் ஊழியத்திலிருந்து தேவபிள்ளைகள் சகோ. சாம் குணசீலன் அவர்கள் ஞாயிறு ஆராதனையில் தேவ செய்தியையும், ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்துக் கொண்டும் ஆராதனையை சகோ. ஷாலோம் பிரபு அவர்கள் நடத்தினார்கள். இதற்கு வாய்ப்பளித்த போதகர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்தநன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

16.10.2016 தங்கராஜா சி.எஸ்.ஐ. ஆலயம், நாகர்கோவில்

கர்த்தருடைய பெரிதான கிருபையால் நாகர்கோவில் தங்கராஜா சி.எஸ்.ஐ. ஆலயத்தில் 16.10.2016 அன்று ஷாலோம் ஊழியத்தின் சார்பாக சகோ. சாம் குணசீலன் அவர்கள் ஷாலோம் ஊழியத்தைக் குறித்து பகிர்ந்துக் கொண்டு தேவசெய்தி கொடுத்தார்கள். இதற்கு வாய்ப்பளித்த போதகர் பிரைட்சன் ஜோஸ் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



# ஞாபகப்படுத்துகிறோம்...

## (கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக)

அன்பான உண்டியல் ஆதரவாளர்களே...!

அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! கிறிஸ்துமஸ் பண்டிகை தினத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் நாம், வரப்போகின்ற கிறிஸ்துமஸைக் கொண்டாட ஜெபித்து இப்பொழுதே ஆயத்தப்படுவது நமது கடமையாகும். கிறிஸ்துமஸ் நாளுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற வாஞ்சையோடு, நீங்கள் எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் அந்த ஆதிவாசிப் பிள்ளைகளுக்கென காணிக்கைகளை சேகரித்து வைத்திருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறோம். இந்தக் காணிக்கையை ஆதிவாசிப் பிள்ளைகளின் கிறிஸ்துமஸ் தேவைகளுக்காகக் கொடுப்பீர்கள் என்று நம்புகிறோம். அதோடு பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காகக் கொடுக்கும் தொகையை எங்கள் ஊழியர் அல்லது பிரதிநிதிகள் மூலமாகக் கொடுக்கலாம். அல்லது எங்களது தலைமை அலுவலகத்திற்கு நேரில் வந்தும் கொடுக்கலாம். அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O / D.D / Cheque** மூலமாக **SHALOM CHARITY MISSION** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், உண்டியலின் எண்ணையும் எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறோம். நீங்கள் உண்டியலைத் திறக்க உங்களுக்கு சாவி **(Key)** வேண்டுமானால் **9698944522** என்ற செல் நம்பருக்குத் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.




தாங்களும் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக காணிக்கைகளை கொடுத்து கர்த்தரிடத்தில் இருந்து ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்வோமாக.

## உங்களுக்காக ஜெபிக்கிறோம்

அன்பான ஆதரவாளர்களே உங்களுக்காகவும் உங்களது குடும்பத்திற்காகவும் நாங்கள் தொடர்ந்து ஜெபித்து வருகிறோம். மேலும் உங்களது ஜெபக்குறிப்புகளை அன்பு பகிர்வு இயக்கம் தலைமை அலுவலகத்திற்கு கடிதம் மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தெரியப்படுத்தினால் நாங்கள் உங்களுக்காக விசேஷமாக ஜெபிக்க ஆயத்தமாயிருக்கிறோம்

# கிறிஸ்மஸ் நாட்களில் பீல் மக்களை நினைப்போம்



நமக்காய் பூமியிலே பாலகனாய் பிறந்து, அற்புதங்களையும் அதிசயங்களையும் இந்த பூமியிலே செய்து, பாடு பட்டு, சிலுவையிலே மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பிறந்த நாளை நாம் கொண்டாடுவதே கிறிஸ்துமஸ் தினமாகும்.

வருடந்தோறும் கிறிஸ்துமஸ் காலங்களில் நம்முடைய சுதேச ஊழியர்களுக்கும் அவர்கள் மனைவிமார்களுக்கும், அவர்கள் பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் கொடுத்து, அவர்களும் கிறிஸ்துமஸ்-ஐ மகிழ்ச்சியாய் கொண்டாட உதவி செய்ய தேவன் நமக்குத் தந்த கிருபைக்காக அவரைத் துதிப்போம். அதே போல் நம்முடைய பள்ளி மற்றும் விடுதியில் படித்து வரும் நம் ஆதிவாசி மாணவ, மாணவிகளுக்கும் சிறு பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் மற்றும் வெகுமதிகளை கிறிஸ்துமஸ் தினங்களில் கொடுத்து வருகிறோம்.

அதே போல் இந்த ஆண்டும் இந்த காரியங்களுக்காக சுமார் ரூ.15 லட்சங்கள் வரை தேவையுள்ளது. ஆகவே கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவினால் ஒரு ஊழியரின் குடும்பத்திற்கு குறைந்தது ரூ. 1500/- அல்லது அதற்கு மேலாகவோ, ஒரு ஆதிவாசி பிள்ளைக்கு குறைந்தது ரூ. 500/- அல்லது அதற்கு மேலாகவோ, கிறிஸ்துமஸ் வெகுமதியாகக் கொடுத்து உதவ அன்பாய் அழைக்கிறோம்.

இந்த வெகுமதி காணிக்கைகளை நவம்பர் மாதத்திற்குள்ளேயே அனுப்பினால் சுதேச ஊழியர்கள் குடும்பத்திற்கும், ஆதிவாசி பிள்ளைகளுக்கும் அன்பளிப்புகளை கிறிஸ்துமஸ்-க்கு முன்பாக கொடுக்க உதவியாக இருக்கும்.

நீங்கள் கொடுக்க விரும்பும் காணிக்கைகளை நேரடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கலாம், அல்லது எங்கள் ஷாலோம் பிரதிநிதிகளிடம் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளலாம்.



**இந்த பீல் மக்களின்
சந்தோஷத்தோடு
கிறிஸ்மஸ்-ஐ வரவேற்போம்!
தேவ ஆசீர்வாதத்தைப்
பெற்றுக் கொள்வோம்!!**

## ஊழியர்களுக்கும், வேலைக்காரர்களுக்கும் உள்ள வேறுபாடுகள்

| வ. எண். | ஊழியர்கள் | வேலைக்காரர்கள் |
|---|---|---|
| 1. | கடவுளுக்காக பணிபுரிவார்கள் | சம்பளத்திற்காக பணிபுரிவார்கள் |
| 2. | நேரம் காலம் பார்க்காமல் பணிபுரிவார்கள் | குறித்த நேரத்தில் மட்டும் வேலை செய்வார்கள் |
| 3. | பணிகளில் உண்மையாக இருப்பார்கள் | கடமைக்காக செய்வார்கள் |
| 4. | அர்ப்பணிப்புடன் செய்வார்கள் | ஏனோதானோவென்று செய்வார்கள் |
| 5. | கடவுளைப் பிரியப்படுத்துவார்கள் | மனுஷனைப் பிரியப்படுத்துவார்கள் |
| 6. | எந்தவொரு எதிர்பார்ப்பும் இருக்காது | எந்தவொரு வேலைக்கும் தனக்கு என்ன கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு அவர்களிடம் இருக்கும். |
| 7. | எந்த பணியையாகிலும் செய்வார்கள் | குறிப்பிட்ட வேலைகளை மட்டும் செய்வார்கள். |
| 8. | தேவபெலத்தோடு செய்வார்கள் | சுய பெலத்தோடு செய்வார்கள். |
| 9. | தேவ சித்தத்தை செய்வார்கள் | சுய சித்தத்தை செய்யவே முயலுவார்கள். |
| 10. | பணிவோடும், தாழ்மையோடும் ஊழியம் செய்வார்கள் | அகம்பாவத்தோடு செய்வார்கள். |
| 11. | உரிமையைப் பற்றி கவலைப்படுவதில்லை | உரிமைக்காகப் போராடுவார்கள். |
| 12. | பட்டம், பதவி, பணம், அந்தஸ்துக்காக ஏங்க மாட்டார்கள் | பட்டம், பதவி, பணம், அந்தஸ்துக்காக ஏங்குவார்கள். |
| 13. | எல்லாவற்றையும் சந்தோஷமாகச் செய்வார்கள் | மந்தமாக, உற்சாகமின்றி வேலை செய்வார்கள். |

# நவம்பர் மாத ஷாலோம் ஜெபங்கள்

| நாள் | நேரம் | இடம் | தேவசெய்தி மற்றும் தொடர்புக்கு |
|---|---|---|---|
| 01.11.2016 (செவ்வாய்கிழமை) | காலை 9.15 முதல் 1.00 மணி | அன்பு பகிர்வு இயக்கம் தலைமை அலுவலகம் No. 5A/323, கால்டுவெல் காலனி 3வது தெரு, **தூத்துக்குடி**-628 008. | **Prof.C.S. கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை |
| 12.11.2016 சனிக்கிழமை | மாலை 5.00 மணிக்கு | M.T.N பில்டிங் (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, **மார்த்தாண்டம்** | சகோ. **செல்வதுரை,** செல் : 9487689869 |
| 12.11.2016 சனிக்கிழமை | காலை 10.00மணி முதல் 1.00 வரை | உபவாச ஜெபம் தலைமை அலுவலகம் **தூத்துக்குடி** | சகோ. **சாம் குணசீலன்,** செல் : 9345675468 |
| 14.11.2016 திங்கள்கிழமை | காலை 10.00மணி முதல் 1.00 வரை | ஷாலோம் பெண்கள் ஜெபக் கூடுகை தலைமை அலுவலகம், **தூத்துக்குடி** | செல் : 9688744522 |
| 19.11.2016 சனிக்கிழமை | காலை 10.00மணி முதல் 1.00 வரை | எபனேசர் பிளாசா, பரமா தெரு ஜங்சன், **நாகர்கோவில்.** | சகோ. **ராபின்சன்** செல் : 9688144522 |
| 19.11.2016 சனிக்கிழமை | காலை 10.00மணி முதல் 1.00 வரை | எஸ்தர் பெண்கள் ஜெபக்குழு கூட்டம் தலைமை அலுவலகம், **தூத்துக்குடி** | செல் : 9688744522 |
| 19.11.2016 சனிக்கிழமை | மாலை 5.30 மணி முதல்9.00மணிவரை | அற்புதராஜ் மெட்ரிக்குலேஷன் பள்ளி நுங்கம்பாக்கம் இரயில் நிலையம் அருகில், **சென்னை** | **சகோ.ஜான் ஜெயசிங்,** செல் : 96982 44577 |
| 26.11.2016 சனிக்கிழமை | காலை 12.00 மணி முதல்12.00மணிவரை | ஷாலோம் சங்கிலி தொடர் ஜெபம் தலைமை அலுவலகம் | செல் : 9688744522 |

# மிஷனெரி வாழ்க்கை வரலாறு

## குளோரிந்தாள்

***கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார்.* சங். 115:12**

தஞ்சை வீதியில் ஒரு பாடையில் பிணம்! மேள தாள வாத்தியங்களுடன் சிறிய ஊர்வலம்! உடலில் மஞ்சள் பூசி, நெற்றியில் குங்குமப் பொட்டிட்டு, பட்டாடை உடுத்தி, பூக்களால் தலையை அலங்கரித்துள்ள ஒரு அழகிய பிராமணப்பெண்! பிணத்தின் பின்னாலே அழைத்துச் செல்லப்படுகிறாள். எதற்காக ? சுடுகாட்டில் கணவனாகிய அந்தப் பிணத்துடன் அவளையும் சுட்டெரிக்க வேண்டுமாம்! இது கட்டாயமானது. வேடிக்கை பார்க்க ஒரு கூட்ட மக்கள்! பரிதாப நிலையைக் கண்டு கண்கலங்கும் மக்களும் உண்டு. ஆங்கிலேய பட்டாள வீரர்களில் சிலரும் இதைக் காண்கின்றனர். ''இதென்ன கொடுமை!இந்த அழகிய இளம்பெண் ஏன் சாக வேண்டும் ? இவளை விடுவிக்கலாமே'' - இந்த சிந்தனையுடன் அந்த

ஊர்வலத்துக்குள் துணிவாகச் சென்று அப்பெண்ணை விடுவித்தனர்! ஈமச்சடங்கை நடத்தி, தங்கள் கடமையுடன் ஏதோ புண்ணியத்தையும் பெறலாம் என்றெண்ணிய புரோகித பிராமணக் குருக்கள், அப்பெண்ணை யாருடைய வீட்டிலும் ஏற்றுக்கொள்ள அனுமதிக்கவில்லை. அப்பெண்ணுக்காக பரிந்து பேசுவோர் யாருமில்லை. ஏற்றுக் கொண்டால் அது ஒரு மா பாதகச் செயல் என்று பந்துக்களும் பரிதவிக்கவில்லை. இளம் விதவையானாலும் மொட்டையடிக்கப்படவில்லை. வெள்ளைப் புடவை அணியவும் இல்லை. பட்டாள வீரர்களின் பாதுகாப்பிலிருந்த கோகிலா என்ற அந்தப் பெண் கர்னல் லிட்டில்டன் பங்களாவில் தங்கியிருந்தாள். தாய்மொழியாகிய மராட்டி மற்றும் தமிழ் மொழியுடன் ஆங்கிலமும் கற்று, கிறிஸ்துவ உபதேசத்தையும் கற்று வந்தாள்.

தஞ்சையிலிருந்து வந்த பட்டாள சிப்பாய்கள் தலைவன் லிட்டில்டனுடனும் கோகிலா பாளையங்கோட்டைக்கு வந்த இந்த சம்பவமே திருநெல்வேலி திருச்சபை வரலாற்றின் தொடக்கமாயிற்று(1777). தஞ்சை அல்ல, நெல்லையே தமிழ்நாட்டில் மிஷனெரிகளின் மையமாக விளங்க தேவன் சித்தங்கொண்டார் போலும்! நெல்லையில் சுவிசேஷ ஊழியத்தை முதன் முதலில் துவக்கி வைத்த இந்த அம்மையாருக்கு, கனம் சுவார்ட்ஸ் ஐயர் தஞ்சையிலிருந்து நெல்லை வந்து திருமுழுக்கு அளித்ததின் மூலம்(1778), நெல்லைப் பகுதியில் சுவிசேஷ விதை விழுந்து, முளைத்து, பலன் கொடுத்தது எனலாம். 1780இல் 40பேர் அடங்கிய திருச்சபை அங்கத்தினர் ஜாபிதா எழுதப்பட்டது. இவ்வாறு திருச்சபை உருவானதை நினைவு கூறுகிறோம்.

குளோரிந்தாளும், கனம் சுவார்ட்ஸ் அவர்களும் தஞ்சையில் வாழ்ந்தவர்கள். 'உடன்கட்டை ஏறுதல்' என்ற கொடூர சம்பவம் நடந்தது தஞ்சையிலே தான். கனம் சுவார்ட்ஸ் அவர்களின் சேவை-அங்குள்ள மன்னருக்கு அவர் செய்த பணிகள்-தஞசை மன்னரான சரபோஜி இவருக்குக் கொடுத்த மரியாதை- சுவார்ட்ஸ் குருவாக- மிஷனெரியாக அங்கு நடப்பித்த பணிகள் - இவையெல்லாம் தஞ்சாவூரின் சிறப்புக்குரியது. தஞ்சை மக்கள் இவற்றை கண்கூடாகக் கண்டார்கள். ஆயினும் தமிழ்நாட்டில் - ஏன் இந்தியாவிலேயே நெல்லை நாட்டில் தான் சிறப்பான திருச்சபை உருவாயிற்று. சுவார்ட்ஸ் அவர்கள் விதைத்த விதை இங்கே தான் பலன் தந்தது ஏன்? இது இறைவனின் அனாதி தீர்மானமாகும்.

அன்று தமக்கென, தமது நாமத்தை மகிமைப்படுத்த இஸ்ரவேல் மக்களை சிறப்பான நோக்குடன் தெரிந்து கொண்ட இறைவன் (ஏசா49:3, 43:21)இன்று இந்திய நாட்டின் இஸ்ரவேலாக நம்மைத் தெரிந்து கொண்டார் என்றால் அது மிகையாகாது. 1பேதுரு 2:9 வெளி1:6 வசனங்களின் படி நம்மை இராஜாக்களும், ஆசாரியர்களுமாகத் தெரிந்து கொண்டார்.

எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுமோ அவனிடத்தில் அதிகம் கேட்கப்படும் என்ற திருமறை வசனப்படி, நாம் பெற்றுக்கொண்ட, ஆசீர்வாதமாக பொறுப்புகளை நினைவுகூர்ந்து, நன்றி செலுத்தி மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வோம்.

குளோரிந்தாள் என்னும் சிறிய வித்திலிருந்துதோன்றிய ஆலமரமாகிய நெல்லை பேராலயம் (டாக்டர். சந்தோஷம்)

பிரமாண்டமாக ஒரு மரம், வாசனை மலர்கள், தொங்கும் கனிகள், கிளைகளில் வசிக்கும் குருவிகள், பூக்களின் தேனை உண்டு வாழும் ஈக்கள், கனிகளை உண்டு வாழும் பறவைகள். இதற்கெல்லாம் கானம் ஒரு சிறிய வித்து. ஒரு மனிதனோ, விலங்கோ வேண்டாம் என உமிழ்ந்த சாதாரண ஒரு வித்து, பிரமாண்டமான, உபயோகம் கொண்டதுமான இம்மாற்றத்துக்குக் காரணம் இந்த வித்தே. அதுபோலவே திருநெல்வேலி அத்தியட்சாதீனத்தின் வல்லமையான ஊழியத்திற்கும், சாட்சிக்கும், வெளிச்சத்தைக் கண்ட ஆயிரக்கணக்கான மக்களின் சரீர, ஆத்மீக ஆசீர்வாதங்களுக்கும் குளோரிந்தாள் என்ற ஒரு விதவையே காரணம்.

அற்பமாக ஆரம்பித்த திருச்சபை - நெல்லைப் பேராயம் இன்று கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட, ஆசீர்வதிக்கப்பட்ட, ஆசீர்வாதத்தை பகிர்ந்து கொள்ள தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி என்பது தெளிவானது.

''கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார். அவர் ஆசீர்வதிப்பார். இஸ்ரவேல் **குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார்.** (சங்.115:12-15)''

இப்பகுதி வசனங்களை வாசித்து, நெல்லையைச் சேர்ந்த ஒரு குடும்பத்தி னருடன்(அகமதாபாத்தில்) ஜெபித்து முடித்த போது, அவர் கீழ்க் கண்டவாறு கூறினார். ''ஐயா, உண்மையாகவே நாம் இஸ்ரவேலர். கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கிறார். நம் மூலம் தேவ நாமம் மகிமைப்படுகிறது. குஜராத் இந்திய மிஷனெரி பணித்தளங்களில் திருச்சபைகள் உருவாக்க இக்குடும்பத்தினர் செய்து வரும் உதவிகளை நான் 1997-ல் கண்ட போது, நெல்லை திருச்சபை மக்களை ஆண்டவர் ஆசீர்வதித்து, மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக, தேவ நாமம் மகிமைப்பட பயன்படுத்துகிறார் என்பதை அறிந்த கர்த்தரை ஸ்தோத்தரித்தேன். நெல்லைக்கு வந்த மிஷனெரி களையும் நினைவு கூர்ந்தேன். நன்றி ராஜா நன்றி.

***நெல்லையில் முதல் பெண் மிஷனெரி*** (1780-1806)

நெல்லை பேராய திருமுழுக்கு பதிவேட்டில் பெயர் பெற்ற குளோரிந்தாள் அம்மையார் சாதாரண திருச்சபையின் அங்கத்தினராக மட்டுமல்ல ஒரு மிஷனெரியாகவும் அர்ப்பணித்தார்கள். ஆத்தும ஆதாயப் பணியைத் தொடங்கி தன் வீட்டில் வருகிறவர்களுக்கு நற்செய்தியை அறிவித்தார்கள். முதலூர் போன்ற இடங்களுக்கும் சென்றதாக சரித்திரம் கூறுகிறது. தாவீதரசன் விரும்பியத போல், கர்த்தருக்கென்று ஒரு ஆலயம் கட்ட விரும்பிய அம்மையார் தமது சொந்த செலவில் 1783ல் தொடங்கி 1785ல்நெல்லை பேராயத்தின் முதல் புராட்டஸ்டன்ட் ஆலயமாகக் கட்டி முடித்தார். கனம் சுவார்ட்ஸ் அவர்களை அழைக்க தஞ்சாவூர் சென்று அவர் இல்லாததால், இராமநாதபுரம் சென்று, அவர் வந்து ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்யும்படி கேட்டுக்கொண்டார். 1785ல் 85பேரின் திருமுழுக்குடன் இந்த ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த ஆலயத்தை இன்று நாம் பாளையில் காண்கிறோம்.1787ல் குடிசையில் ஆரம்பிக்கப்பட்ட சிறு பள்ளிக்கூடத்தையும் நினைவு கூறும்போது பிற்காலத்தில் நமது நாட்டுக்கு வந்த மிஷனெரிகள் செய்த சபை மற்றும் கல்விப் பணிகளுக்கு குளோரிந்தாள் ஓர் முன்னோடி எனக்கூறினால் மிகைளாகாது. மரித்தும் இன்றும் பேசும் அம்மையார், 1806ல் மரணமடைந்த போது நெல்லையில் 35 சபைகளும், சமார் 5000 கிறிஸ்தவர்களும் இருந்தனர். (பாளை, முதலூர், நாசரேத் மற்றும் சில சபைகள் இவைகளுடன் அடங்கும்).

***தண்ணீர் மேல் போட்ட ஆகாரம் பலன் கொடுத்தது.***

ஐரோப்பாவில் லீதியாள், ஆசியாவில் பிரிஸில்லாள், திருநெல்வே லியில் குளோரிந்தாள் என இம்மாது சிரோன்மணியைக் குறித்துப் புகழும் கூற்று உண்மையே.

***அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை பண்ணலாம்*** சகரி4:10




பிரியமானவர்களே

**நமது ஷாலோமின் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை**

கீழ்காணும் தொலைக்காட்சி சேனல்களிலும் கண்டு தேவனைத் துதியுங்கள்

| | |
|---|---|
| ஹெவன் Heaven tv | ***நாகர்கோவில் – ஞாயிற்றுக்கிழமை*** <br> மாலை 5.00 மணி முதல் 5.30 வரை |
| **ARK T.V.** | ***நாகர்கோவில் – திங்கள் கிழமை*** <br> மாலை 9.30 மணி முதல் 10.00 வரை |
| ஹெவன் Heaven tv India | ***சென்னை – ஞாயிற்றுக்கிழமை*** <br> மாலை 5.00 மணி முதல் 5.30 வரை |
| HOPE T.V. | ***தூத்துக்குடி – ஞாயிற்றுக்கிழமை*** <br> மாலை 5.00 மணி முதல் 5.30 வரை |
| **CROSS T.V.** | ***தூத்துக்குடி – புதன் கிழமை*** <br> காலை 7.30 மணி முதல் 8.00 வரை |




அன்புள்ள ஷாலோம் ஆதரவாளர்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களில் வாழும் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு உணவு, உடை, உறைவிடத்துடன் கல்வி மற்றும் உயர்கல்வியினை அளித்து அவர்கள் சமுதாயத்தில் முன்னேறப் பாடுபடுவதோடு, பீல் ஆதிவாசி ஜனங்களுக்கு இலவச மருத்துவச் சேவை மற்றும் இதர சமுதாய முன்னேற்றப் பணிகளை நிறைவேற்றிவரும் Shalom Charity Mission க்கு அரசாங்கத்திடமிருந்து வருமான வரிவிலக்குச் சான்று (80G) கிடைக்கப் பெற்றுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். சமுதாய முன்னேற்றப் பணி, பீல் ஆதிவாசி சிறுவர் முன்னேற்றப்பணி, மற்றும் மருத்துவ பணிக்குக் காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்கள் இந்த வருமான வரிவிலக்கினை கேட்டுப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.



# ஷாலோம்

## வேத வினாப் போட்டி

36

(2 இராஜாக்கள், 1 நாளாகமம் புத்தகங்களிலிருந்து விடை காணவும்)

1. உன்னுடைய கண்களினாலே அதைக் காண்பாய் என்றது யார்?
2. எந்த பணம் ஆலயத்திற்காகக் கொண்டு வரப்படாமல் ஆசாரியரைச் சேர்ந்தது?
3. தமஸ்குவிலுள்ள பலிபீட சாயலையும்,மாதிரியையும் யார் யாருக்கு அனுப்பினான்?
4. குற்றமற்ற இரத்தத்தைச் சிந்தி எருசலேமைக் குற்றமற்ற இரத்தத்தால் நிரப்பினது யார்?
5. காலேபின் ஊர் எது?
6. எப்ரோன் அடைக்கலப் பட்டணமாக யாருக்குக் கொடுக்கப்பட்டது?
7. பராக்கிரமசாலிகளான வில்வீரராய் இருந்தவர்கள் யார்?
8. ஆசாரிப்புக் கூடாரவாசல் காவல்காரனாயிருந்தவன் யார்?
9. சவுலின் குடும்பத்தைக் காப்பாற்றப் பார்த்தவர்கள் யார்?
10. நிபுணனாயிருந்து கீத வித்தையைப் படிப்பித்தது யார்?

## வேதவினாப் போட்டியில் பங்குபெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள்

1. **விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.**
2. **கேள்வி எண்ணைக் குறிப்பிட்டு பதில் களை மட்டும் தெளிவாக எழுதினால் போதும்**
3. **விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.**
4. **பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 16.11.2016**

## கடந்த அக்டோபர் மாத வேதவினா போட்டி எண் 35க்கான சரியான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அதோனீராம் | - | 1 இராஜாக்கள் 5 : 14 |
| 2. | ஆயிரத்து ஐந்து | - | 1 இராஜாக்கள் 4 : 32 |
| 3. | மூன்றாம் நாள் | - | 1 இராஜாக்கள் 3 : 18 |
| 4. | ரேகாபும், பானாவும் | - | 2 சாமுவேல் 4 : 5,6 |
| 5. | சீமேயி | - | 1 இராஜாக்கள் 2 : 42 |
| 6. | அக்கினிக்குப் பின் அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டாயிற்று | - | 1 இராஜாக்கள் 19 : 11,12 |
| 7. | சீதோனியர் | - | 1 இராஜாக்கள் 5 : 6 |
| 8. | இஸ்ரவேலின் ராஜா | - | 1 இராஜாக்கள் 22 : 10,11 |
| 9. | பிக்ரியின் குமாரனாகிய சேபா | - | 2 சாமுவேல் 20 : 1 |
| 10. | நாலாம் வருஷம் சீப் மாதம் | - | 1 இராஜாக்கள் 6 : 37 |

**கடந்த அக்டோபர் மாத வேத வினா போட்டி எண் 35இல் பங்கு பெற்றவர்கள் 56 பேர். சரியான விடையினைக் குறித்த நேரத்திற்குள் எழுதிய 14 பேர்களின் விபரங்கள்.**

| | | |
|---|---|---|
| 1. | திருமதி. D. ஞானமணி ஜெயபால் | - எஸ். கைலாசபுரம் |
| 2. | திருமதி. பியூலா தாஸ் | - சென்னை |
| 3. | சகோதரி பிபிலின் காட்ஸ்மதி | - மார்த்தாண்டம் |
| 4. | சகோதரி சுகந்தி | - தூத்துக்குடி |
| 5. | சகோதரி பிரியா. J.S. | - நாகை மாவட்டம் |
| 6. | சகோ. வில்சன் தர்மராஜ் | - போடிநாயக்கனூர் |
| 7. | சகோதரி டி. சுகந்தலெட் | - குமரி மாவட்டம் |
| 8. | சகோ. சாலமோன் ராஜ் | - கொட்டாரம் |
| 9. | திருமதி. ஹில்டா தேவராஜ் | - சென்னை |
| 10. | திருமதி. சந்திரா குமாரி மோகன் | - நாகர்கோவில் |
| 11. | சகோ. ஜாண் நிர்மல் குமார் | - சென்னை |
| 12. | திருமதி. பாலின் ஜோன்ஸ் | - தூத்துக்குடி |
| 13. | சகோதரி டெய்சி ஜேக்கப் | - நாகர்கோவில். |
| 14. | சகோதரி மாலதி ஜெயசெல்வம் | - நாகைமாவட்டம் |

### பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி

**SHARING LOVE MISSION**
New No.5A/323, Old. No.5/168.
Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 00.8. Tamil Nadu.
Phone : 0461 - 2375468

வாசகர்கள் தங்கள் பதில்களை
9345675468 - என்ற மொபைல் எண்ணிற்கு
SMS மூலமாகவோ What Appமூலமாகவோ
அனுப்பலாம் அல்லது
info@shalommission.in
என்ற ஈ-மெயிலும் அனுப்பலாம்.

WhatsApp

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- **தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்துக் கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**
- **உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**
- **காணிக்கைகளை** E.M.O. **மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பும்போது கிளை (சிதம்பரநகர்) என்று குறிப்பிட்டு அனுப்பவும். அவ்வாறு அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கொடுக்கும்படி தயவாய் கேட்டுக் கொள்கிறோம்.**
- SHARING LOVE MISSION **என்ற பெயருக்கு** D.D. **அல்லது** Cheque **எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு பதிவு தபால் அல்லது கொரியர் மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம்.**
- **உங்களது வங்கிக் கணக்கிலிருந்து,** Net Transfer **மூலமாகவும் காணிக்கைகளை கீழ்க்கண்ட எங்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பலாம்.**
- **நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க்கண்ட வங்கிகளில் எங்கள் கணக்குகளில்** Cash (or) Cheque (or) D.D. **மூலம்** Deposit **பண்ணலாம்.**
- **எங்களது ஷாலோம் கிளை அலுவலகங்களுக்கு நேரடியாக வந்தும் காணிக்கைகளைக் கொடுத்து ஜெபித்துச் செல்லலாம்.**

---

**வங்கிக் கணக்கின் பெயர்** : **Sharing Love Mission**

Branch : Tuticorin. **கிளை** : **தூத்துக்குடி**

---

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

---

AXIS BANK

**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

---

**நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில்** Cash (or) Cheque (or) D.D. **மூலமாகவோ அல்லது** Net Transfer **மூலமாகவோ காணிக்கை செலுத்தினால், உடனடியாக அந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை** e-mail, Phone, SMS, Whats app **மூலமாக எங்களுக்குத் தெரிவியுங்கள். தொடர்புக்கு** : 93456 75468

## உங்கள் ஜெப உதவிக்கு ஷாலோம் கிளை அலுவலகங்களின் முகவரிகள்

**HEAD OFFICE** **SHARING LOVE MISSION, Bro. Sam Gunaseelan**

No. 5A/323,-3rd Street, Caldwell Colony, TUTICORIN-628008
Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

**CHENNAI BRANCH OFFICE**

**Bro. John Jeyasingh** No.102-2nd Main Road Sathya Nagar, Padi, CHENNAI - 600050,Cell : 9698244577

**NAGERCOIL BRANCH OFFICE** **Bro. Robinson. S.**

Ebenezer Plaza, Parama Street, WCC Junction,Nagercoil - 629001
Cell : 9688144522, 9698444522

**MARTHANDAM BRANCH OFFICE** **Bro. Selvadurai.G**

M.T.N. Building, North Street, Near Women's Police Station, Marthandam, K.K. Dist. - 629165, Cell : 9487689869, 9659644500

**MADURAI BRANCH OFFICE** **Bro. Chandra Paul. S**

6/3, Nellaiappar Puram 7th Street,Tirunagar (p.o)
MADURAI-625006, Cell : 9698644522

**TIRUNELVELI BRANCH OFFICE** **Bro. David. R**

56 A/4,-C.S.I Church South Street, (Upstairs) STC road, Perumalpuram, Palayamkottai TIRUNELVELI-627007, Cell 9698844599

**MUMBAI BRANCH OFFICE** **Bro. Jacob. N.**

Bathani Bhavan, Room No. 11, First Floor, R. No. 2, Gate No. 6, Malvani, Malad West, Mumbai - 400095,Cell : 09819554974

**COIMBATORE BRANCH OFFICE** **Mr.Yardli Vinodh.J**

No: 31 LakshumiGarden, Palaya Pudur, Periyanayakkan palayam, Coimbatore -641020, Cell : 9698144522

**குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப...**

Shalom Charity Mission

**SHALOM CHARITY MISSION**

Branch : Tuticorin,

AXIS BANK

Branch : Tuticorin,

**10501010096779 -**

(IFS Code : UTIB0000105)

TMB

**Tamilnad Mercantile Bank**

**174100710400061**

(IFS Code : TMBL0000174)

**Branch : Tiruchendur Road**

# நாட்டு நடப்புச் செய்திகள்

**ஆபத்தில் முடியும் 'அழகுக்கான அறுவை சிகிச்சைகள்:**

ஆண்டுதோறும் Cosmetic surgery என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் தோற்ற மேம்பாட்டு அறுவை சிகிச்சையை பல்லாயிரக்கணக்கானவர்கள் செய்து கொள்கிறார்கள். பல தனியார் நிறுவனங்கள் இவற்றை அதிதீவிரமாக சந்தைப்படுத்த முனைகின்றன. அதே சமயம் பிரிட்டன் அறுவை சிகிச்சை நிபுணர்களுக்கான அமைப்பு இத்தகைய சிகிச்சைகளை அளிக்கும் மருத்துவ நிபுணர்கள் முறையான பயிற்சியற்றவராக இருந்தால் உருவாகும் ஆபத்துகள் குறித்து எச்சரித்துள்ளது. தோற்றத்தை மேம்படுத்த சிகிச்சை எடுக்கச் சென்று, தோற்றம் மேம்படாதது மட்டுமல்ல கூடுதல் சிக்கலால் அவதியுறுபவர்கள் குறித்த பிபிசி செய்திக்குறிப்பு.

**அமெரிக்காவிலும் அழிவை ஏற்படுத்திய மேத்யூ சூறாவளி:**

அமெரிக்காவின் தென் கிழக்கில் மேத்யூ சூறாவளியால் பலியானோரின் எண்ணிக்கை 15 ஆக உயர்ந்துள்ளது. தெற்கு கரோலினாவில் சார்லஸ்டன் பகுதிகளில் கணிசமான வெள்ளப்பெருக்கு. பெரியதொரு வெள்ளப்பெருக்கால் துன்புற்ற வடக்கு கரோலினாவில் ஏழு பேர் பலியாகியுள்ளனர். வெள்ளப்பெருக்கு அதிகரித்து வருகின்ற பல இடங்களில் இருந்து நூற்றுக்கணக்கானோர் மீட்கப்பட்டுள்ளனர். மேத்யூ சூறாவளி தற்போது புயலாக தரம் கீழிறங்கி கடலை நோக்கி செல்கிறது. பிழைத்தோருக்கு அதிக அளவிலான உதவி தேவைப்படுகிறது.

**போதை மருந்து பயன்பாடு பரிசோதனை – சர்வதேச ஒலிம்பிக்குழு ஆய்வு:**

விளையாட்டு போட்டிகளின் போது செய்யப்படுகின்ற போதை மருந்து பயன்பாடு பற்றிய முழுமையான சோதனையை மேற்கொள்வது பற்றிய கலந்தாய்வை சர்வதேச ஒலிம்பிக் குழு சுவிட்சர்லாந்திலுள்ள லேஸாண் நகரில் நடத்துகிறது.


**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

**தலைமை அலுவலகம்**

**SHARING LOVE MISSION**
5A/323, Caldwell Colony,
3rd Street, Tuticorin - 628 008.
Tamil Nadu.
Phone : 0461-2375468, 2377737
Cell : 9345675468

**பணித்தள அலுவலகம்**

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat
Phone : 07043334501
Cell : 09377445468

**email : info@shalommission.in Website : www.shalommission.in**

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD PROJECT



| | |
|---|---|
| தகப்பனார் பெயர் | : கானுசிங் புரியா |
| தாயார் பெயர் | : மீரா புரியா |
| படிக்கும் வகுப்பு | : 4-th Std |
| பிறந்த நாள் | : 10-07-2006 |
| சொந்த ஊரின் பெயர் | : பிப்பளிப்பாடா |
| தாலுகா | : ஜாபுவா |
| மாவட்டம் | : ஜாபுவா |
| மாநிலம் | : மத்தியப்பிரதேசம் |
| படிக்கும் பள்ளியின் பெயர் | : Mont fort School, Harinagar |

## மாணவரின் பெற்றோரைப் பற்றி சில வரிகள் :

மாணவரின் பெற்றோரைப் பற்றி சில வரிகள் :

இவனுடைய தகப்பனார் இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவர். இவருடைய குடும்பத்தினர் சாராயம், பீடி, தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தனர். அதினிமித்தம் குடும்பத்தில் சமாதானமில்லாமல் இருந்தது. இவரது குடும்பத்தில் ஒவ்வொருவராக மாறி மாறி வியாதிப்படுவார்கள். இப்படி 15 வருடங்களாக மிகவும் கஷ்டப்பட்டார்கள். விடுதலைக்காகவும் சுகத்திற்காகவும் எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. அதன் பின் கானுசிங் முதலாவது ஷாலோம் ஊழியர் மூலம் இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டு, கூட்டத்திற்கு சென்று, விடுதலை பெற்று, இயேசுவை ஏற்றுக் கொண்டார். அங்கு ஊழியர் ஜெபித்ததில் குடும்பத்தினர் அனைவரும் விடுதலையும் சுகமும் பெற்று, இயேசுவை ஏற்றுக் கொண்டனர். பின்பு கானுசிங் ஊழியம் செய்ய வேண்டுமென்ற பாரம் ஏற்பட்டு, ஊழியத்திற்கு அர்ப்பணித்து, தற்போது தனது சொந்த கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார்.

திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை : ப்ரேம் நன்றாக படிப்பான். நன்றாக ஜெபம் செய்வான். கபடி விளையாட்டில் ஆர்வமுண்டு. இவனுக்கு சகோதரர்கள் உண்டு.

ஜெபியுங்கள் : இவனுக்காக, இவனுடைய படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்கிற ஊழியத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**Sponsor's Name : Mr.Abi Yesudoss, Bangalore.**

**ஜெபித்து தாங்க முன் வாருங்கள்**

பிரியமானவர்களே நீங்களும் ஜெபித்து மாதம் ரூ.700 கொடுத்து பீல்ஆதிவாசி மாணவரைத் தாங்க முன்வரலாம்.

Shalom Charity Mission என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D.அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம் உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்தி வையுங்கள்

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449. Postal Regn. No. : TTN/07/2015-2017.
TN/WPP-95/SR/2015-2017, Date of Publication : 25th of every month.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

'யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான்...' ஏசாயா. 6:8

Shalom

# ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகை

ஷாலோம் 25 YEARS வெள்ளி விழா ஆண்டு

**நாள்**
12.11.2016
**நேரம்**
மாலை 6.00 மணி

**இடம் :**

## பிரியம் திருமண மண்டபம்
(New Delight Hall )
**WCC Junction, Gnanai Street.**
**நாகர்கோவில்**

**தலைமை :**

**அருட்திரு. E. ஹென்றிதாஸ்**
( தலைமை போதகர் - C.S.I ஆலயம், நேசமணிநகர் )

**Eva.T. ஞான ஜெப செல்வராஜ்**
( உதவி போதகர் - C.S.I ஆலயம், நேசமணிநகர் )



**தேவ செய்தி :**

## பேராயர். V. தேவதாஸ்
( பீல் ஆதிவாசிகள் மத்தியில் ஷாலோம் ஊழியங்கள் குஜராத் )

- பாடல் ஆராதனை .....
- சிறப்பு பணித்தள வீடியோ காட்சிகள்.....
- மிஷனெரி பணித்தள சாட்சிகள்.....
- மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை.....
- அனல் மூட்டும் மிஷனெரி தரிசன செய்தி.....

**Contact:**

Bro.Robinson 9688144522
Bro.Selvadurai 9487689869
Bro.Thanga Durai 9698544522
Sis. Jeyantha 9698444522

Owned and Published by V. Devadass from New No.5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. and Printed by S. Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin-628 002. Editor : V. Devadass